முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.243/2015**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 22.01.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 22.01.2026 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | வீரமுத்து | வயது.. | 70 |
| தந்தை பெயர்.. | சேப்பெருமாள் | கிராமம்.. | பெரியமேடு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. வழக்கு சொத்து அட்டவணையில் எந்த ஐட்டங்கள் எனக்கு பாத்தியம் என்று வழக்காடுகிறேன் என்றால் புல எண். தெரியவில்லை, புல எண்.27/7 நான் சுயமாக பாலகிருஷ்ணனிடமிருந்து கிரயம் வாங்கிய சொத்து. பாலகிருஷ்ணனை சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். அடுத்து மூன்று சொத்துகள் உள்ளது அதன் புல எண். தெரியாது. அதற்கு எவ்வாறு உரிமைகோருகிறேன் என்றால் பட்டா வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். அன்பழகன் என்பவரிடமிருந்து மேற்படி மூன்று சொத்துக்களையும் பரிவர்தனை மூலம் பெற்றேன். அன்பழகன் வாதி குடும்பத்திற்கு இரத்தசொந்தமில்லை. அன்பழகனுக்கு எவ்வாறு சொத்து கிடைத்தது என்றால் பாலகிருஷ்ணனும், ஜெயலட்சுமியும் அவருக்கு எழுதிகொடுத்தார்கள். பாலகிருஷ்ணனின் தந்தை பெயர் கோவிந்தசாமி, கோவிந்தசாமி உயிருடம் இருக்கும் காலத்தில் பாலகிருஷ்ணனும், ஜெயலட்சுமியும் அன்பழகனுக்கு கிரயம் கொடுத்தார்களா என்றால் இல்லை.

2. பாலகிருஷ்ணனும் கோவிந்தசாமியும் பாகபிரிவினை செய்து கொண்டார்களா என்றால் இல்லை. கோவிந்தசாமி வாரிசுகள் பாலகிருஷ்ணன், கஸ்தூரி. கோவிந்தசாமி இறந்த பிறகு அவர் மனைவி ஜெகதாம்பாள் உயிருடன் இருக்கிறார். ஜெகதாம்பாள் அவரது மகள் ஜெயலட்சுமிக்கு தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்சொன் தானசெட்டில்மெண்ட்ற்கு பிறகு தான் நான் வழக்கு சொத்தை பெற்றேன் என்றால்

சரிதான். பாலகிருஷ்ணனம், அவரது தந்தை கோவிந்தசாமியும் நான் கிரயம் பெற்ற சொத்தை சுயமாக வாங்கவில்லை என்றால் சரிதான். நான் ஏற்படுத்தப்பட்ட பரிவர்தனை பத்திரமோ, கிரயம் பத்திரமோ சட்ட தகுதியான பத்திரங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாலகிருஷ்ணனிடமிருந்து கிரயம் வாங்கிய சொத்தின் புல எண். ஞாபகம் உள்ளதா என்றால் புல எண்.22/7 ஆகும். வழக்கு சொத்து பாலகிருஷ்ணன் அவரது தந்தை கோவிந்தசாமி அவரது உத்தண்டிக்கு பாத்தியமானது என்று சொன்னால் சரிதான். தகுதியானவர்களிடமிருந்து சொத்தை நான் வாங்காததால் சொத்துக்கள் எனக்கு பாத்தியமானது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. வழக்கில் இரு தரப்பு ஆவணங்கள் அடிப்படையில் எதிர் கோரிக்கை பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். வாதியின் சொத்துக்கள் பேரில் தகுதியற்ற லாபம் அடையும் நோக்கத்தில் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதி ஜெயலட்சுமிக்கு பாலகிருஷ்ணன் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் தொடர்பாக வழக்கு எதுவும் தாக்கல் செய்துப்பட்டுள்ளதா என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. பாலகிருஷ்ணன் தான செட்டில்மெண்ட் மூலம் கிடைத்த சொத்தை அமைதியான முறையில் அனுபவித்து வருகிறார் என்றால் அதை பற்றி தெரியாது. ஜெகதாம்பாள் இறந்தது பற்றி ஞாபகம் இல்லை, வழக்கிற்கு முன்பு இறந்தாரா என்றால் ஞாபகம் இல்லை. ஜெகதாம்பாள் 2012 இல் இறந்தார் என்று சொன்னால் அதுவரை வழக்கு சொத்தில் எந்தவித பிரச்சனையும் இல்லை என்று சொன்னால் சரிதான்.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.